ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வென்றிமா ॥

*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வென்றிமா ॥

## திருவெள்ளறை

‡வென்றி மாமழுவேந்தி முன் மண்மிசை
மன்னரை⋆ மூவெழுகால்
கொன்ற தேவ⋆ நின் குரை கழல் தொழுவதோர்
வகை⋆ எனக்கருள்புரியே⋆
மன்றில் மாம் பொழில் நுழைதந்து⋆ மல்லிகை
மௌவலின் போதலர்த்தி⋆
தென்றல் மா மணம் கமழ் தர வரு⋆
திருவெள்ளறை நின்றானே (1)

‡வசையில் நான்மறை கெடுத்த அம் மலர்
அயற்கருளி⋆ முன் பரி முகமாய்⋆
இசைகொள் வேத நூல் என்றிவை பயந்தவனே!⋆
எனக்கருள் புரியே⋆
உயர்கொள் மாதவிப் போதொடுலாவிய⋆
மாருதம் வீதியின்வாய்⋆
திசை எல்லாம் கமழும் பொழில் சூழ்⋆
திருவெள்ளறை நின்றானே (2)

வெய்யனாய் உலகேழ் உடன் நலிந்தவன்⋆
உடலகம் இரு பிளவா⋆
கையில் நீள் உகிர்ப் படையது வாய்த்தவனே!⋆
எனக்கருள் புரியே⋆
மையின் ஆர் தரு வரால் இனம் பாய⋆
வண் தடத்திடைக் கமலங்கள்⋆
தெய்வ நாறும் ஒண் பொய்கைகள் சூழ்⋆
திருவெள்ளறை நின்றானே (3)

www.prapatti.com

வாம்பரியுக மன்னர் தம் உயிர் செக⋆
    ஐவர்கட்கரசளித்த⋆
காம்பின் ஆர் திரு வேங்கடப் பொருப்ப!⋆
    நின் காதலை அருள் எனக்கு⋆
மாம் பொழில் தளிர் கோதிய மடக் குயில்⋆
    வாய் அது துவர்ப்பெய்த⋆
தீம்பலங்கனித் தேன் அது நுகர்⋆
    திருவெள்ளறை நின்றானே (4)

மான வேல் ஒண் கண் மடவரல்⋆ மண் மகள்
    அழுங்க முந்நீர்ப் பரப்பில்⋆
ஏனம் ஆகி அன்றிரு நிலம் இடந்தவனே!⋆
    எனக்கருள் புரியே⋆
கான மா முல்லை கழைக் கரும்பேறி⋆ வெண்
    முறுவல் செய்தலர்கின்ற⋆
தேனின் வாய் மலர் முருகுகுக்கும்⋆
    திருவெள்ளறை நின்றானே (5)

பொங்கு நீள் முடி அமரர்கள் தொழுதெழ⋆
    அமுதினைக் கொடுத்தளிப்பான்⋆
அங்கோர் ஆமை அதாகிய ஆதி!⋆ நின்
    அடிமையை அருள் எனக்கு⋆
தங்கு பேடையோடூடிய மதுகரம்⋆
    தையலார் குழல் அணைவான்⋆
திங்கள் தோய் சென்னி மாடம் சென்றணை⋆
    திருவெள்ளறை நின்றானே (6)

ஆறினோடொரு நான்குடை நெடு முடி⋆
    அரக்கன் தன் சிரம் எல்லாம்⋆
வேறு வேறுக வில்லது வளைத்தவனே!⋆
    எனக்கருள் புரியே⋆
மாறில் சோதிய மரதகப் பாசடைத்⋆
    தாமரை மலர் வார்ந்த⋆



www.prapatti.com

தேறல் மாந்தி வண்டின் இசை முரல்⋆
திருவெள்ளறை நின்றானே (7)

முன்னிவ்வேழுலகுணர்வின்றி இருள் மிக⋆
உம்பர்கள் தொழுதேத்த⋆
அன்னம் ஆகியன்றரு மறை பயந்தவனே!⋆
எனக்கருள் புரியே⋆
மன்னு கேதகை சூதகம் என்றிவை⋆
வனத்திடைச் சுரும்பினங்கள்⋆
தென்னவென்று வண்டின் இசை முரல்⋆
திருவெள்ளறை நின்றானே (8)

ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று⋆
அகல் இடம் முழுதினையும்⋆
பாங்கினால் கொண்ட பரம! நின் பணிந்தெழுவேன்⋆
எனக்கருள் புரியே⋆
ஓங்குபிண்டியின் செம் மலர் ஏறி⋆
வண்டுழிதர⋆ மாவேறித்
தீங்குயில் மிழற்றும் படப்பைத்⋆
திருவெள்ளறை நின்றானே (9)

‡மஞ்சுலா மணி மாடங்கள் சூழ்⋆
திருவெள்ளறை அதன் மேய⋆
அஞ்சனம் புரையும் திருவுருவனை⋆
ஆதியை அமுதத்தை⋆
நஞ்சுலாவிய வேல் வலவன்⋆
கலிகன்றி சொல் ஐயிரண்டும்⋆
எஞ்சல் இன்றி நின்றேத்த வல்லார்⋆
இமையோர்க்கரசாவர்களே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com